# X
# கட்டளைகள்

வழங்குதலும் வழி நடத்துதலும்

## இரட்சகதாஸ்



THE VOICE IN DESERT

THE VID LIFE

# X
# கட்டளைகள்

வழங்குதலும் வழி நடத்துதலும்

## இரட்சகதாஸ்

## நூல் குறிப்பு

நூற்பெயர் : பத்துக் கட்டளைகள்

வழங்குதலும் வழி நடத்துதலும் : இரட்சகதாஸ்

திருத்தியப் பதிப்பு : 09.09.2025

மொத்தப் பக்கங்கள் : அட்டையுடன் 24

தாள் அளவு : A5, 100 GSM

விலை : கருப்பு வெள்ளை 100 ரூபாய்
பன்னிறம் 200 ரூபாய்

வெளியீடு : த வாய்ஸ் இன் டெசர்ட்

உரிமை : த விட் லைஃப்

முகவரி : ஞானப்பள்ளி,
எண் 123, கீரைப்பாக்கம் நிலையம்,
நெல்லிக்குப்பம் சாலை, கண்டிகை,
சென்னை 600127, தமிழ் நாடு, இந்தியா

தொடர்புக்கு : +91 97104 93208, 73974 29209,

இணையதளம் : www.thevidlife.org

மின்னஞ்சல் : info.thevidlife.org
thevoiceindesert@gmail.com.





# THE VID LIFE

## ( THE UNIVERSAL KINGDOM )

---

# நோயில்லாத உடம்பு
# நிரந்தரமான தீர்வு
# த விட் லைஃப் இராஜியத்துக்குள்
# எல்லோரும் வாருங்கள்

---

## அழைப்பும் இணைப்பும் : இரட்சகதாஸ்

## பக்க விளக்கங்கள் 01 - 24

01. நூற்பெயர், முன்னட்டைப் பகுதி - 01, 02, 03
02. நூல் குறிப்பு - 04
03. அழைப்பு மடல் - 05
04. பக்க விளக்கங்கள் - 06
05. பத்துக் கட்டளைகள் - 07
06. முதலாம் கட்டளையின் விளக்கம் - 08, 09
07. இரண்டாம் கட்டளையின் விளக்கம் - 09, 10
08. மூன்றாம் கட்டளையின் விளக்கம் -11, 12
09. நான்காம் கட்டளையின் விளக்கம் - 13
10. ஐந்தாம் கட்டளையின் விளக்கம் - 13, 14, 15
11. ஆறாம் கட்டளையின் விளக்கம் - 16
12. ஏழாம் கட்டளையின் விளக்கம் - 17
13. எட்டாம் கட்டளையின் விளக்கம் - 17, 18
14. ஒன்பதாம் கட்டளையின் விளக்கம் - 18, 19, 20
15. பத்தாம் கட்டளையின் விளக்கம் - 20, 21
16. நிறைவுரைப் பகுதி - 21, 22
17. நூற்பெயர், பின்னட்டைப் பகுதி - 23, 24



THE VID LIFE

*THE VOICE IN DESERT*

09.09.2025

+91 9710493208
www.thevidlife.org
thevoiceindesert@gmail.com
gnanappalli, # 123, keerappakkam nilaiyam,
kandigai, nellikuppam road, chennai 600127

புதிய உடன்படிக்கை

# த விட் வாழ்வின் பத்துக் கட்டளைகள்

**உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் - 01**

**சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் - 02**

**கூடி வருதல் வேண்டும் - 03**

**கற்றல், கற்பித்தல் வேண்டும் - 04**

**தசம பங்கு செலுத்துதல் வேண்டும் - 05**

**சமத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் - 06**

**உடன்பட்டு இருக்க வேண்டும் - 07**

**அன்பு செய்ய வேண்டும் - 08**

**எந்த ஒன்றையும் வணங்காதிருக்க வேண்டும் - 09**

**விரும்பாத செயலைச் செய்யாமல் இருக்க வேண்டும் - 10**

Thevidliferatchagadoss

த விட் லைஃப் பிரபஞ்சப் பேரரசுக்குள் எல்லோரும் வாருங்கள். நோயில்லாத உடம்போடு நிம்மதியாக வாழ, இதன் பத்துக் கட்டளைகளை முழுமையாகப் பின்பற்றுங்கள்.

## 01) உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

த விட் லைஃபில் உடன்படிக்கை செய்துகொள்ளுதல் என்பது, ஏதேனும் ஒன்று அல்லது ஒரு நபர் கீழ்க்காணுமாறு உடன்படிக்கை செய்துகொள்ளுதல் ஆகும்.

“________(அவரவர் பெயர்)________ஆகிய நான், த விட் லைஃபை ஏற்றுக்கொள்கிறேன். த விட் லைஃப் கட்டளைகளை முழுமையாகக் கடைபிடித்து, என் ஏற்றுக்கொள்ளுதலை உறுதி செய்கிறேன். இதன் மூலம் த விட் லைஃபின் அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொள்கிறேன். இதுவே, த விட் லைஃபோடு நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை”.

இப்படியாக, த விட் லைஃபோடு ஒரு புதிய உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அந்த உடன்படிக்கையை மீறக்கூடாது. த விட் லைஃபில் கிடைக்கக்கூடிய உரிமைகள் முழுமையாகக் கிடைக்கப் பெறாத போது, பத்துக் கட்டளைகளை இன்னும் முழுமையாகக் கடைப்பிடித்து, உரிமைகளை உரிமையாக்கிக் கொள்ள வேண்டும்.

**இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் வாழ்வின் முதல் கட்டளை. இதனால், பெறப்படுவது உரிமை.**

## 02) சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**த விட் லைஃபில் சுத்தப்படுத்திக் கொள்ளுதல் என்பது, த விட் லைஃபில் இருக்கிற ஒன்று அல்லது ஒரு நபர் தன்னைப் போலவே, பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்கள் / கடைப்பிடிப்பவைகள் தவிர மற்றவைகளைத் தூரப்படுத்திக் கொள்ளுதலே சுத்தப்படுத்திக் கொள்ளுதல் ஆகும். ‘தூரப்படுத்தப்படும் மற்றவைகள்’ என்பதற்குள் கீழ்க்காணும் மூன்று நிலைகளும் உள்ளடங்குகின்றன.**

- **நாங்கள், பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம். ஆனால், கடைப்பிடிப்பவர்களுக்கு ஆதரவாக இருப்போம் என்பவர்கள் / என்பவைகள்,**

- **நாங்கள், பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்; கடைப்பிடிப்பவர்கள், கடைப்பிடிக்காதவர்கள் என எவருக்கும் ஆதரவாக இருக்க மாட்டோம். நாங்கள் நடுநிலையாளர்களாக இருப்போம் என்பவர்கள் / என்பவைகள்,**

- நாங்கள், பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்; மற்றவர்கள் / மற்றவைகள் கடைப்பிடிக்கவும் விட மாட்டோம் என எதிர்த்து நிற்பவர்கள் / நிற்பவைகள்,

ஆகிய இந்த மூன்று நிலைகளில் இருப்பவர்கள் / இருப்பவைகளைத் தூரப்படுத்திக் கொள்ளுதலே சுத்தப்படுத்திக் கொள்ளுதல் ஆகும்.

சுத்தப்படுத்திக் கொள்ள, பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்கள்/ கடைப்பிடிப்பவைகளில், திண்மநிலை, நீர்மநிலை, ஆவிநிலை, காற்றுநிலை, நெருப்புநிலை ஆகிய நிலைகளில் காணப்படுகிறவைகள் மட்டுமல்லாமல், வேறு நிலைகளில் காணப்படுகிற எந்த ஒன்றையும் உதவிக்கு அழைத்துப் பயன்படுத்திக் கொள்ள முழு உரிமை உண்டு.

குறைந்தபட்சம், நீ உன் உடலையும் உடமைகளையும் உறைவிடங்களையும் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நாளுக்கு ஒரு முறையாவது சுத்தப்படுத்திக் கொண்டு வருதல் உன் கடமையாக இருக்க வேண்டும்.

இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் இரண்டாம் கட்டளை. இதனால், பெறப்படுவது அசாத்திய பலம்.

## 03) கூடி வருதல் வேண்டும்

த விட்  லைஃபில் கூடி வருதல் என்பது, த விட் லைஃப் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிற ஏதேனும் ஒன்று / ஒரு நபர் தன் சுயத் தேவைக்காகவோ அல்லது பொதுத் தேவைக்காகவோ "அனைவரும் கூடி வாருங்கள்" என அழைக்கிற போது, ஒன்றுகூடி வருதலாகும்.

'த விட் லைஃப்' என்பது, நோய்நொடி இல்லாமல் வாழ்வதற்குத் தேவையான உண்மைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வாழ்வியலாகும். இந்த வாழ்வியல் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. த விட் லைஃப் கட்டளைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கடைப்பிடிப்போருக்கு உரிமையானது. உரிமையை நிலைநாட்ட 'த விட் லைஃப் கூடுகையில் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

எல்லா நாட்களிலும் நடைபெறும் கூடுகையில் பங்கேற்க முடியவில்லை என்றால், வாரத்திற்கு ஒரு முறையாவது கூடுகையில் பங்கேற்க வேண்டும், நேரில் சென்று பங்கேற்க முடியாதவர்கள் காணொளி வழியாகப் பங்கேற்க வேண்டும். குறைந்தபட்சம், ஓராண்டிற்கு ஒருமுறையாவது நேரில் சென்று பங்கேற்க வேண்டும்.

'த விட் லைஃப்' மக்கள் கூடி வரும் கூடுகை என்பது,

- .ஒருவரை ஒருவர் சந்தித்தல்.
- கூடுகையின் நோக்கத்தை நிறைவேற்றுதல்.
- தனக்குத் தானே சுய மதிப்பீடு செய்துகொள்ளுதல்.
- சிறப்பு அழைப்பாளர்கள், புதியதாக வருகை தந்திருப்பவர்கள் என அனைவரோடும் கலந்துரையாடுதல்.
- அனைவரும் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பளித்தல்.
- ஆடி, பாடி, விளையாடி மகிழ்தல்.
- உண்டு, உறங்கி ஓய்வெடுத்தல்

போன்ற முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இப்படியாக, த விட் லைஃப் கூடுகையில் பங்கேற்பதால், நீ இணைப்புத் தன்மை பெறுவாய். உனக்குள் ஈர்ப்புத் தன்மையும் சேர்ப்புத் தன்மையும் கவர்ச்சியும் பெருகும். விலக்கல் தன்மையும் பிரித்தல் தன்மையும் அருவெறுப்புப் தன்மையும் உன்னை விட்டு விலகும்.

இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் மூன்றாம் கட்டளை. இதனால், பெறப்படுவது இணைப்புத் தன்மை.



### 04) கற்றல், கற்பித்தல் வேண்டும்.

த விட் லைஃபைக் கற்றல், கற்பித்தல் என்பது, பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிற ஏதேனும் ஒன்று / ஒரு நபர் த விட் லைஃபின் தன்மை, நோக்கம், தேவை, அதன் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி ஆழமாகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் அனுபவித்துக் கற்பதோடு, அனைத்திற்கும்/ அனைவருக்கும் கற்றுக்கொடுத்தலாகும் .

த விட் லைஃபை அனுபவித்துக் கற்று, கற்றதை அடுத்தவர்களுக்குக் கற்பிக்கிற நபர், பத்துக் கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் நபராக இருக்க வேண்டும்.

இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் நான்காம் கட்டளை. இதனால், பெறப்படுவது, ஞானம், புத்தி, அறிவு ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வி.

### 05) தசம பங்கு செலுத்துதல் வேண்டும்.

பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிற ஏதேனும் ஒன்று / ஒரு நபர் தனக்குள், தனக்கென்று உருவாக்கும் உடல்பலம், மனபலம், பொருளாதாரபலம், உறவுபலம், சமூகபலம் போன்ற எல்லாவிதமான பலத்திலிருந்தும் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பகுதியை த விட் லைஃப்புக்கு உரித்தாக்குதலே

தசம பங்கு செலுத்துதல் ஆகும். செலுத்த முடிந்தவர்கள் / செலுத்த முடிந்தவைகள், பத்தில் இரண்டு, மூன்று, நான்கு என, முடிந்த அளவிலான எண்ணிக்கையில் செலுத்துதலும், பத்தில் பத்தையும் முழுமையாகச் செலுத்துதலும் வரவேற்றலுக்கு உரியவைகள்.

வேலை, உழைப்பு - இவை உடல்பலத்தின் வெளிப்பாடு. அறிவு, திறமை - இவை மனபலத்தின் வெளிப்பாடு. பணம், பொருள், சொத்து, வருமானம் - இவை பொருளாதார பலத்தின் வெளிப்பாடு. உரிமை, ஆதரவு, - இவை உறவு பலத்தின் வெளிப்பாடு. அங்கிகாரம், அனுகூலம் - இவை சமூகபலத்தின் வெளிப்பாடு. இவ்வனைத்து வெளிப்பாடுகளும் இவைகளைச் சார்ந்தவைகளும் உரித்தாக்குதலுக்கு உரியவைகள்.

கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் தன்னைச் சுற்றி இருக்கக் கூடிய, குறைந்த பட்சம் பத்து வகையான உறவுகளின் ஊடே, ஒவ்வொரு உயிரும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அந்தப் பத்து வகையான உறவுகள்..,

01. வழிகாட்டிகள் / கருத்துரைஞர்கள்

02. முன்னோர்கள்



03. பெற்றோர்கள்

04. உடன்பிறப்புகள்

05. உறவினர்கள்

06. நண்பர்கள்

07. வேலைக்காரர்கள்

08. அந்நியர்கள்

09. இணையர்கள் (மனைவியர்கள், கணவன்மார்கள்)

10. வழித்தோன்றல்கள் (பிள்ளைகள்)

“இந்தப் பத்து உறவுகளின் தொடர்பில் செயல்படும் ஓர் உயிராகிய நான், அனைத்து உறவுகளையும் என்னோடு இணைத்துக் கொள்ளாமல், என்னை ஏற்றுக்கொண்டு என் பின்னே வருகிறவைகளை மட்டும் என்னோடு இணைத்துக் கொண்டு, உருவாக்கிய என் உருவாக்கங்களிலிருந்து பத்தில் ஒரு பகுதியை, த விட் வாழ்வுக்கு உரித்தாக்குகிறேன்” என்கிற கருத்தின் அடிப்படையிலேயே இந்த ஐந்தாம் கட்டளை கடைப்பிடிக்கப்பட வேண்டும். இதனால், எல்லா விதமான பலவீனங்கள் நீங்கி மிகுதியான செல்வபலம் உண்டாகும்.

இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் ஐந்தாம் கட்டளை.

## 06) சமத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

த விட் லைஃபின் சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பது, பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிற ஏதேனும் ஒன்று / ஒரு நபர், இவ்வுலகில் உள்ள அனைத்தும் ( A-Z ) நம்மைப் போன்ற உயிர்களே, அல்லது உயிர்களால் ஆன தொகுப்புகளே என்பதை ஏற்றுக்கொண்டு, அனைத்திற்கும் சம நிலை, சம ஸ்த்தளம், சம ஸ்த்தானம், சம உரிமை உண்டு என்பதை ஒத்துக்கொண்டு, எல்லாவற்றோடும் தொடர்பு கொள்ளுதலும் பழகுதலும் இணைதலுமாகும்.

உயிர் என்பது, ஒரு சுயம்; சுயத்தன்மை உள்ளது. அது தன் விருப்பப்படி செயல்படக் கூடியது. தன் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவும், நிறைவேற்றிக் கொள்ளாமல் இருக்கவும் முழு உரிமை கொண்டது. திண்மம், நீர்மம், ஆவி, காற்று, நெருப்பு போன்ற எந்த ஒரு வடிவமாகவும் உருமாறக் கூடியது. எந்த ஒன்றாலும் அழிக்க முடியாதது.

இப்படியாக, அனைத்தும் ( A-Z ) நம்மைப் போன்ற உயிர்களே; உயிர்களால் ஆன தொகுப்புகளே என்பதை ஏற்றுக்கொண்டு, சமத்துவச் சிந்தனையில் செயல்பட வேண்டும். இதுவே, அனைத்திற்குமான/ அனைவருக்குமான த விட் லைஃபின் ஆறாம் கட்டளை. இதனால், பெறப்படுவது முழுச் சுதந்திரம்.



## 07) உடன்பட்டு இருக்க வேண்டும்.

பத்துக் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிக்கிற அனைத்தின்/ அனைவரின் தேவை, விருப்பம், சிந்தனை, செயல்பாடு ஆகிய எல்லாவற்றுக்கும் உடன்படுதலே த விட் லைஃப்போடு உடன்பட்டு இருத்தல் ஆகும்

இப்படியாக, உடன்பட்டு இருப்பதால், ஒற்றுமை உணர்வு மேலோங்கி நிற்கும். ஒற்றுமையின் விளைவு உயர்வு. இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் ஏழாம் கட்டளை.

## 08) அன்பு செய்ய வேண்டும்.

அன்பு செய்தல் என்பது, த விட் லைஃபின் பத்துக் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிக்கிற அனைத்தையும் / அனைவரையும் ஏற்றுக்கொண்டு அன்பு செய்தலாகும்.

அன்பு என்பது,

- பாதுகாத்தல்,
- பராமரித்தல்,
- சுதந்திரம் கொடுத்தல்,
- விளைவதை அனுபவித்தல்

ஆகிய நான்கு செயல்களின் தொகுப்பே அன்பு என்பதாகும்.

- 'த விட் லைஃப்' மக்களுக்கு எந்தவிதத் தீங்கும் நேராமல் பாதுகாக்க வேண்டும்.
- அவர்களின் தேவையை அறிந்து, அவர்களைப் பராமரிக்க வேண்டும்.
- எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி அவர்களைச் சுதந்திரமாகச் செயல்பட விட வேண்டும்.
- அவர்களால் ஏற்படக் கூடிய விளைவுகளை ஏற்று அனுபவிக்க வேண்டும்.

இப்படியாக, 'த விட் லைஃப்' மக்களை அன்பு செய்வதால், குறைவு நீங்கி நிறைவு (Fullfilment) ஏற்படுகிறது. இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் எட்டாம் கட்டளை.

### 9) எந்த ஒன்றையும் வணங்காதிருக்க வேண்டும்.

த விட் லைஃபில் எந்த ஒன்றையும் வணங்காதிருத்தல் என்பது, த விட் லைஃபின் பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிற ஏதேனும் ஒன்று / ஒரு நபர், தான் அறிந்தது; அறியாதது; புரிந்தது; புரியாதது; தெரிந்தது; தெரியாதது போன்ற எந்த ஒன்றையும் வணங்காதிருத்தலோடு, தன்னையும் வணங்கச் செய்யாதிருத்தலாகும்.

வணங்குதல் என்பது, கண்ணுக்குத் தெரிந்த, தெரியாத..,

ஏதேனும் ஒன்றை அல்லது ஒரு நபரை நம்புவதும் முக்கியத்துவப் படுத்துவதுமான ஒருங்கிணைந்த செயலாகும்.

கடவுள் என்று சொல்லப்படுகிற முழுமைக்குள் அனைத்தும் இருந்துகொண்டு இருக்கின்றன என்பதை உணர்ந்து, எந்த ஒன்றையும் வணங்கக் கூடாது. வணங்கப்படுகிற எந்த ஒன்றும், வணங்கப்படாத எந்த ஒன்றும், கடவுள் இல்லை. வணங்கச் சொல்கிற எந்த ஒன்றும் வணங்கச் சொல்லாத எந்த ஒன்றும் கடவுள் இல்லை. வணங்குதல் என்பது, த விட் வாழ்வின் சமத்துவத்திற்கு எதிரானது.

எனவே, வணங்குதலுக்கு உரியது என்றும், வணங்குதலுக்கு உரிய இடம் என்றும் எந்த ஒன்றையும் உருவாக்கக் கூடாது. பூஜைகள், புனஸ்கரங்கள், வழிபாடுகள், தொழுகைகள், விழாக்கள், கொண்டாட்டங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பஞ்சாங்கங்கள், வாஸ்த்துகள், பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், குறி சொல்லுதல் போன்ற எச்செயல்களிலும் ஈடுபடக் கூடாது. இவைகளை நம்பவும் முக்கியத்துவப்படுத்தவும் கூடாது.

“நீ எதை வணங்குகிறாயோ அதற்கு நீ அடிமைப்படுகிறாய். நீ யாரை வணங்குகிறாயோ அவருக்கு நீ கட்டுப்படுகிறாய்.



இதனால், நீ உன் சுயத்தை இழக்கிறாய். பயத்தைப் பெறுகிறாய். உன் பலத்தை மறந்து, பணிந்து கிடக்கிறாய். அதுவே உனக்குப் பழகிப்போய், பாழும் பள்ளத்தில் படுத்துக் கிடக்கிறாய்.

எல்லோருடைய துன்பத்திற்கும், துயரத்திற்கும், கவலைக்கும், கண்ணீருக்கும், கஷ்ட்டத்திற்கும், நஷ்ட்டத்திற்கும், போராட்டத்திற்கும், தோல்விக்கும், தொந்தரவுக்கும் இதுவே அடிப்படை ஆகும்.

எனவே, நீ எந்த ஒன்றையும் / ஒருவரையும் வணங்கக் கூடாது. இதனால், உனக்குள் துணிவு பிறக்கும். நீ தைரியசாலியாக இருப்பாய். உன்னை எதுவும் / எவரும் அடிமைப்படுத்தவோ, அடக்கி வைக்கவோ முடியாது. நீ சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் இருப்பாய்”.

இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் லைஃபின் ஒன்பதாம் கட்டளை. இதனால், பெறப்படுவது துணிவு.

**10) விரும்பாத செயலைச் செய்யாமல் இருக்க வேண்டும்.**

த விட் லைஃபில், விரும்பாத செயலைச் செய்யாமல் இருத்தல் என்பது, த விட் லைஃபின் பத்துக் கட்டளைகளைக்



கடைப்பிடிக்கிற ஏதேனும் ஒன்று / ஒரு நபர், தான் விரும்பாத எந்தச் செயலையும் செய்யாமல் இருத்தலாகும். ஆனால், தான் விரும்புகிற செயலைச் செய்தலும் செய்யாமல் இருத்தலும் அவரவர் விருப்பமாகும்.

“நீ எந்தச் செயலை ஆர்வமுடன் செய்கிறாயோ அச்செயலே நீ விரும்புகிற செயலாகும். அச்செயல் உனக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் புது பலத்தையும் வெற்றியையும் தரக்கூடியது. நீ எந்தச் செயலை ஆர்வமுடன் செய்யவில்லையோ அச்செயலே நீ விரும்பாத செயலாகும். அச்செயல் உனக்கு மனக் குறைவையும் துன்பத்தையும் பலவீனத்தையும் தோல்வியையும் தரக்கூடியது. எனவே, நீ விரும்புகிற செயலைச் செய்கிறாயோ, இல்லையோ. நீ விரும்பாத செயலைச் செய்யவேக் கூடாது. இதனால், நீ மிகுந்த பாதுகாப்போடு இருப்பாய்”.

இதுவே, அனைத்திற்குமான / அனைவருக்குமான த விட் வாழ்வின் பத்தாம் கட்டளை. இதனால், பெறப்படுவது பாதுகாப்பு

**நிறைவுரை :**

“இந்தப் பத்துக் கட்டளைகளையும் நீ ஏற்றுக்கொண்டு, அவைகளை முழுமையாகக் கடைபிடித்தால், நோய்கள் உன்னை நெருங்காது. ஆபத்துகள் உன்னை அணுகாது.

அசம்பாவிதங்கள் எதுவும் உன்னை அண்டாது. வந்திருக்கும் அனைத்து வகையானத் துன்பங்களும் உன்னை விட்டு நீங்கி விடும். உன் சுற்றுச்சூழலில் பெரிய அளவு மாற்றம் ஏற்படும். உன் பலம் அதிகரிக்கும். தனித்த ஆளுமையாய் வளர்ந்து நிற்பாய். உன்னை நீயே சாய்த்துக் கொண்டாலொழிய உன்னைச் சாய்க்க வேறொரு சக்தி இல்லை. நடக்கிறதெல்லாம் உன் நன்மைக்காகவே நடக்கும்.

உடல்பலம், மனபலம், செல்வபலம், உறவுகள் புடை சூழ படைபலம், ஞானம் நிறைந்த அறிவுபலம், அனைத்தையும் ஆண்டு அனுபவிக்கும் நுகர்வுபலம், ஆக்கும்பலம், அழிக்கும்பலம், காக்கும்பலம் என எல்லா பலமும் நலமும் வளமும் பெற்று, எல்லா வயதிலும் நீ நிம்மதியாக வாழ்வாய். இதற்கு நானே சாட்சி. நானே பொறுப்பு".

Thevidliferatchagadoss

# X

# கட்டளைகள்

## வழங்குதலும் வழி நடத்துதலும்

## இரட்சகதாஸ்

